# பாரதிதாசனின் மொழிச் சிந்தனைகளின் இன்றைய தேவை

*முனைவர் சோம. இராசேந்திரன்*
*இணைப் பேராசிரியர், தலைவர்*
*தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)*
*புத்தனாம்பட்டி*

மனிதகுல வரலாற்றில் மொழியை உயிராகக் கருதி அதற்காக நூற்றுக்கணக்கானோர் தங்கள் இன்னுயிரைத் தந்து மொழிகாக்கும் போரினை நிகழ்த்திய ஒரே இனம் தமிழினம். மொழியுணர்ச்சியை முதன்மைப்படுத்திப் பக்தி இயக்கங்களையும் அரசியல் இயக்கங்களையும் வளர்த்தெடுத்தவர்களாகத் தமிழர்களை அடையாளம் காணமுடியும்.

**மொழிகாப்பு மறந்த நாடு**
**முன்னேற்றம் தொலைத்த நாடு**
**பழிவந்து சேரும் முன்னே**
**பழந்தமிழ் காப்போம் வாரீர்**[1]

என்று இன்றும் மொழிகாப்புக் கவிதைகளை எழுதிக்கொண்டிருக்கிற நிலையினைக் கண்ணுறுகிற பொழுது அதற்கான தேவை குறித்த சிந்தனையும் மேலெழுகிறது. பொதுவாக, ஒரு மொழியை நன்றாகக் கற்கவேண்டும் நன்றாகப் பேசவேண்டும் தேவைப்பட்டால் சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று சிந்திப்பது இயல்பானதாகும். ஆனால், தொடர்ந்து ஒரு மொழியைக் 'காக்க வேண்டும் அழியாமல் காக்கவேண்டும்!' என்ற குரல் மேலெழும்புகின்ற பின்னணி குறித்தும் ஆய்வு செய்யவேண்டியுள்ளது. ஒரு பேதை உரைத்ததாகச் சொன்னாலும் 'மெல்லத் தமிழினிச் சாகும்.' என்ற அச்ச விதைகளை முதலில் தூவிய பாரதிக்கும் அந்த அச்சம் இருந்திருக்கிறது என்றே கருதவேண்டியுள்ளது. தமிழிலக்கிய வரலாற்றில் 'தமிழ்' என்ற சொல்லைக் கவிதை வழி மிகுதியாக உச்சரிக்க வைத்த முதல் கவிஞனாகப் பாரதியை அடையாளம் காணலாம். அவன் பேசிய தமிழின் இனிமையும் அவன் வியந்த தமிழின் பெருமையும் அவன் தெரிவித்த தமிழ் வாழ்த்தும் பெருமிதத்தால் வந்தவை மட்டுமல்ல. ஆழ்மன அச்சத்தாலும் வந்தவை. ஆனாலும், இந்திய தேசியப் பற்றுடன் நாட்டு விடுதலையினை முதன்மையாகக் கொண்டிருந்ததாலும் சக்திதாசனாக வடமொழியையும் வடமொழி இலக்கியங்களையும் ஏற்றுக்கொண்டதாலும், இந்தித்திணிப்புப்போன்ற மொழிச்சிக்கலைச் சந்திக்கிற வாய்ப்பில்லாத காரணத்தாலும் பாரதியின் மொழிச்சிந்தனை குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே நின்றுவிட்டது. பாரதியின் வழித்தடத்தில் பயணம் தொடங்கினாலும் தந்தை பெரியாரின் திராவிட இயக்கத்தால் ஈர்க்கப்பட்டுப் பெரியாரியப் பகுத்தறிவுச் சிந்தனைகளின் வழிநடந்ததும், திராவிடப் பற்றும் ஆரிய எதிர்ப்பும் கொண்டிருந்ததாலும் மொழி, இன, பண்பாட்டுத் தளங்களில் பாரதிதாசன் தனித்தடத்தில் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு ஆய்வு செய்தால்தான் பாரதிதாசனின் மொழிச்சிந்தனை குறித்து முழுமையாக உணரமுடியும். பாரதிகால அச்சம் மேலை மொழியாகிய ஆங்கிலத்தால் தமிழுக்குத் தீங்குநேரும் என்பதுதான். பாரதிதாசன் காலத்தில் ஆங்கிலத்தைக்காட்டிலும் வடமொழி இந்தியால்தான் தமிழுக்குப் பெருங்கேடு ஏற்படும் என்ற அச்சம் மேலோங்கியது. இன்றைய அரசியல், சமுதாய, கல்விச் சூழல் அந்த நிலைக்கே திரும்பிக் கொண்டிருப்பதால் பாரதிதாசனின் மொழிச்சிந்தனைகளை மீண்டும் ஆய்ந்துணரவேண்டியது இன்றைக்குக் காலத்தின் கட்டாயமாகிறது. இந்நிலையில் பாரதிதாசனின் மொழிச்சிந்தனைகளை 1. மொழியினிமைப் பெருமிதம், 2. மொழிப்போராட்டமும் பாரதிதாசனும் 3.மொழிவளர்ச்சிச் சிந்தனைகள் என மூவகைகளில் பகுத்து ஆய்வது பொருத்தமானதாகும்.

**மொழியினிமைப் பெருமிதம்**

தமிழின் இனிமை, இன்பத்தமிழ், தமிழ்உணர்வு, தமிழ்ப்பேறு, எங்கள் தமிழ், தமிழ் வளர்ச்சி, தமிழ்க்காதல், எந்நாளோ?, சங்கநாதம், தமிழ்க்கனவு ஆகிய தலைப்புகளில் பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்கள் தமிழின் சிறப்புகளை விரிவாக எடுத்தியம்புகின்றன. தமிழின் சிறப்புகளை மட்டுமே பேசும் மேற்கண்ட தலைப்புகளன்றியும் காதல், நாடு முதலான வேறு சிலவற்றைப் பாடும்போதும் தமிழுணர்வை முதன்மைப் படுத்தியுள்ளமையைக் காணலாம். 'தமிழ் மகளே வேண்டும்!', 'பேசுதற்குத் தமிழின்றிக் காதலின்பம் செல்லுமோ?' 'நாட்டியல் நாட்டுவோம், இவ்வகையிலான தமிழ்சார்ந்த தலைப்புகளன்றியும் வேறு தலைப்புகளிலும் மொழிச்சிந்தனைகளாகப் பாரதிதாசனின் பாடலடிகளைக் காண இயலுகிறது. குடும்ப விளக்கு, புரட்சிக்கவி முதலான காவியங்களிலும் தாய்மொழிக்கல்வி முதலான மொழிச்சிந்தனைகள் முதன்மையாக இடம்பெறுகின்றன. "தமிழுக்கு அமுதென்று பேர்" என்னும் நூலில் தமிழ்மொழி குறித்த பல்வேறு செய்திகளை விரிவாகப் பேசுகிறார். தமிழுக்கு எதிரானவர்களை, தமிழர்க்கு எதிரானவர்களைக் கடுமையாகச் சாடுகிறார். எந்தப் பொருண்மை பற்றிப்பாடினாலும் இயன்ற இடத்திலெல்லாம் தமிழ் குறித்துப் பாடத்தவறவில்லை. இதனை, "உயிரை உணர்வை வளர்க்கும் தமிழைப் பிறவிக்குத் தாயாகக் கண்டார். தமிழ் என்று தோள்தட்டி ஆடினார். நல்லதமிழ் வெல்க என்று பாடினார். .... தொட்ட இடமெல்லாம் தமிழின் பெருமையைச் சொல்லிச் சென்றார். அவர் பாடிய எல்லா நூல்களிலும் தமிழின் சீர்மையை நிலை நாட்டினார்."[2] என்னும் தா.வே.வீராசாமி கூற்றின் வழியாகவும் உணரலாம்.

**மொழிப்போராட்டமும் பாரதிதாசனும்**

மொழிக்கும் பகைவர்கள் உண்டு அவர்கள் திட்டமிட்டு இன்னொரு நாட்டின் மொழியை அழிக்க நினைக்கிறார்கள் என்னும் பொருள் தரும்,

**ஒருநாட்டு மொழியினை ஒழிப்பவன் எண்ணம்**
**ஒழிந்தது போகுமுன் ஏற்படும் வண்ணம்**

என்னும் கவிதை அடிகளை எடுத்துக்காட்டலாம். தமிழ்நாட்டில் 1937ஆம் ஆண்டில் காங்கிரசு ஆட்சியமைத்தவுடன் சி.இராசகோபாலாச்சாரியார் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்கினர். அப்போது தந்தை பெரியார் இந்திஎதிர்ப்புப் போரை அறிவித்தார். பெரியார் இந்தித்திணிப்பை மொழிச்சிக்கலாக மட்டும் பார்க்காமல் இனப்பண்பாட்டு அழிப்புச்சிக்கலாகப் பார்த்தார். இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு கோரி 03.07.1938 அன்று குடியரசு இதழில் எழுதிய தலையங்கக் கட்டுரையின் இறுதியில் "ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மக்களும் இது சமயம் வெளிவந்து, தன கடமையைச் செய்து, தமிழ்நாட்டை – உலகத்தில் இல்லாவிட்டலும், பூகோளப் படத்திலாவது உருவிருக்கச் செய்வார்களாக!."[3] என்று அவர் உருக்கமாக எழுதினார். இவ்வாறு தந்தை பெரியார் எழுதியமை தமிழர்களை அச்சுறுத்துவதற்காக அல்ல ஓர் இனத்தின் பண்பாட்டை அழிப்பதுதான் அந்த இன அழிவிற்குத் தூவப்படுகிற நச்சுவிதையாகும். இனப் பண்பாட்டை அழிப்பதற்கான அடிப்படைத் தொடக்கமே மொழி அழிப்பாகும். இதனை உள்வாங்கினால் மட்டுமே வலிந்து திணிக்கப்படும் ஆதிக்க மொழியின் அழிப்பாற்றலை உணரமுடியும். இதனை நன்கு உணர்ந்ததால்தான் மிக வீறுகொண்டெழுந்த இந்தி எதிர்ப்புப் போரில் கவிதை ஆயுதம் ஏந்திக் களமிறங்கியவனாகப் பாரதிதாசன் விளங்கினார். இந்தி எதிர்ப்புப் பாடல்களாகக் காணக்கிடைகின்ற பாடல்வரிகளில் பாரதிதாசனின் போர்க்குணம் முழுமையாக வெளிப்படக் காணலாம். .

**"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் – நீங்கள்**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே**
**செந்தமிழுக்குத் தீமை வந்தபின்னும் – இந்தத்**
**தேகம்இருந் தொருலாப முண்டோ?"**
**எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம் –எங்கள்**
**இன்பத்தமிழ் மொழிக்கே தருவோம்**

**பங்கம் விளைத்திடில் தாய்மொழிக்கே – உடற்**
**பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்**
**மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை – நமை**
**மாட்ட நினைக்கும் சிறைச்சாலை ( இந்தி எதிர்ப்புப் பாட்டு- எல்லோரும் வாருங்கள்)**

என்றும் இவைபோலவும் பாரதிதாசன் யாத்த பாடல்கள் பாரதிதாசனின் படைப்புகளில் தனித்தன்மை மிக்கதாக அமைந்திருக்கக் காணலாம். பாரதிதாசன் பாடல்களை விரிவாக ஆய்வு செய்கிற அ.அறிவொளி, இந்தி எதிர்ப்புப் பாடல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "பிரெஞ்சுப் புரட்சியின்போது ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூலும், வால்டேர் கவிதைகளும் வாளும் வேலுமாகப் பயன்பட்டன என்று வரலாறு கூறும். அதுபோல இக்கவிஞன் இப்போராட்டக் காலத்தில் பாடிய கவிதைகள் போர்மறவனுக்கு ஊக்கம் கொடுத்த துடிமுழக்கமும் முரசஒலியும் போல் இருந்தன எனலாம்..... சுருக்கமாகவும்,விரிவாகவும் சொல்லிவிடுவதென்றால் இப்பாடல்களில் பீறிட்டெழும் உணர்ச்சி அவன் கவிதைஉலகில் வேறு எங்குமே பார்க்கமுடியாது."[4] இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்த பாரதிதாசன் ஆதிக்கமொழியை எதிர்ப்பது என்பதோடு நின்றுவிடாமல் மொழித்திணிப்புக்கு எதிரானதொரு நிலையான தீர்வையும் தருகிறார். .

**தாய்மொழி நூற்றுக்கு நூறுபெயர் – பெறத்**
**தக்கதோர் கட்டாயம் ஆக்கிவிட்டால்**
**போய்விடும் கல்லாமை! இங்கதன்பின்- பிற**
**புன்மொழி கள்வந்து சேரட்டுமே. (இந்தி எதிர்ப்புப் பாட்டு- இந்தியா கட்டாயம்)**

இந்தி எதிர்ப்புப் பாடல்களிலேயே காணக்கிடைக்கும் இந்தத் தீர்வை எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகியும் இன்னும் எட்டமுடியாமல் இன்றுவரை போராடிக்கொண்டேயிருக்கவேண்டிய நிலையே தமிழர்களின் பேரவலமாகும்.

**மொழி வளர்ச்சிச் சிந்தனைகள்**

தமிழ் தொன்மையான மொழி என்பது உட்பட எண்ணற்ற சிறப்புகளைக் கொண்டிருந்தாலும் தமிழர்களின் ஆங்கிலமோகம் அளவிடற்கரியதாகவே இருந்து வருகிறது. "பல்கலைக் கழகங்களில் தமிழ் போதனை மொழியாக வரமுடியாது என்று துணிந்து கூறும் அஞ்சாமையும் தமிழர்களுக்குத்தான் உள்ளது. 'உங்கள் தாய்மொழியிலே உங்களால் படங்களைக் கற்றுகொள்ளமுடியும் என்று மற்றவர்கள் சொல்லும்போது, 'எங்கள் தாய் மொழியால் முடியவே முடியாது.' என்று கூறும் நாக்கு இந்தத் தமிழ்நாட்டில் பலர்க்கு அமைந்திருக்கிறது."[5] என்று மு.வ. வருந்திக் கூறிய நிலை இன்றும் அப்படியே உள்ளது. இந்நிலையில்தான் பாரதிதாசனின் தமிழியக்கப் பாடல்கள் குறித்துச் சிந்திக்கவேண்டியது இன்றியமையாததாகிறது. மொழிச் சிக்கல் என்பது சிலர் முயற்சியால் தீர்ந்துவிடாது. ஒரு மொழி அழியாமல் நிலைபெற்று வாழ்வதற்குச் சமுதாயத்தின் கூட்டுப்பங்களிப்பு இன்றியமையாதது. இதனை உணர்ந்த பாரதிதாசன் தமிழியக்கத்தில், துறைதோறும் தமிழின் எழிலை அழிக்க நினைக்கும் நிலையக்கண்டு "நெஞ்சு பதைக்கும் நிலை" கூறித் தொடங்குகிறார். தமிழுக்குத் தீங்கு செய்யும் திருந்தாத்தமிழர் "இருப்பதைவிட இறப்பது நன்று" என்று சினந்து எழுதுபவர், "வரிப்புலியே தமிழ் காக்க எழுந்திரு" என்று இளந்தமிழர்களை நோக்கிக் கூறி,

**உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு**
**வருந்தீமை உனக்குவரும்**
**தீமை அன்றோ! (தமிழியக்கம்)**

என்று எச்சரித்துவிட்டு, பெண்கள்முதியோர், வாணிகர், அரசியல் சீர்வாய்ந்தார், புலவர், குடும்பத்தார், கோயிலார், அறத்தலைவர், விழாநடத்துவோர், கணக்காயர், மாணவர், பாடகர், கூத்தர், பாட்டியற்றுவோர், சொற்பொழிவாளர், ஏடெழுதுவோர், பெருஞ்செல்வர் என அனைவரிடமும் தனித்தனியாய்க் கோரிக்கை வைத்துவிட்டு மற்றும்பலர் என்னும் தலைப்பில் அச்சகத்தார் உட்படச்

சிலரையும் தமிழ் காக்க வேண்டுகிறார். வணிகர், தம் முகவரியை வரைகின்ற பலகையில் ஆங்கிலமா வேண்டும்?

**"பவன்" "மண்டல்" முதலியன**
**இனியேனும் தமிழகத்தில்**
**பயிலா வண்ணம்**
**அவண் சென்று முழங்கிடுவீர்!**
**ஆங்கிலச்சொல் இந்திமொழி**
**வடசொல் யாவும்**
**இவண்தமிழிற் கலப்பதுண்டோ (தமிழியக்கம்)**

என்று மக்கள் மிகுதியாகச் செல்கிற வணிக நிலையங்களின் பெயர் மாற்றத்திலிருந்து தமிழ் காக்கும் பணியைத் தொடங்க வலியுறுத்துகிறார். ஆங்கிலம் மட்டுமல்ல உணவகங்களிளின்று வழக்கத்திலிருக்கிற 'பவன்' என்பது முதலாகிய வடசொல், இந்தி என எந்தச்சொல்லும் தமிழில் கலக்கக்கூடாதென்கிறார். அடுத்து இவர் அதிகம் கண்டிப்பது சுவடிகள் என்று இவரால் குறிக்கப்படும் பாட நூல்கள் தமிழில் இல்லாத நிலையினைத்தான்.

**தமிழ்தழுவாச் சுவடிதனைத்**
**தணல்தழுவா திராதினிமேல்**
**தமிழ்நா டெங்கும். (தமிழியக்கம்)**

என்று தமிழில் இல்லாத சுவடிகள் தீயிடப்படும் என்கிறார். தாய்மொழியில்லாத கல்வியைக் குழந்தைக்குத் தருவது எத்தனை கேடானது என்பதை,

**அமுதூட்ட நஞ்சூட்டி**
**அகமகிழும் தாயுண்டோ**
**அருமை சேய்க்கே? (தமிழியக்கம்)**

என்று வினவுகிறார். குழந்தைகளுக்குத் தமிழ்வழியில் கல்வி தராதது அவர்களுக்கு நஞ்சூட்டுவது போன்ற பெருங்கேடாகும் என்ற கருத்தானது கவிதையின் மிகைமொழியன்று அது கல்வியியல் உண்மையாகும் என்பதை, "குழந்தைகளுக்குத் தாய்மொழியில் அறிவியலைப் புகட்டாத எந்தச் சமூகமும் முன்னேறியதில்லை. பள்ளிச்சாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை, ஊராட்சி முதல் உச்சநீதிமன்றம்வரை, நகராட்சி முதல் நாடாளுமன்றம் வரை, கணிப்பொறியிலிருந்து அணுப்பொறிவரை, தலையாரியிலியிருந்து தலைமைச் செயலகம் வரை தாய் மொழியில் செயல்படும் சமூகம்தான் அறிவியல் ஆரோக்கியமும் அரசியல் ஆரோக்கியமும் பெற்று அனைத்து இயல்களிலும் சாதனைச் சிகரங்ககளை எட்டமுடியும். இதுவும் வரலாறு."[6] என்ற தணிகைச்செல்வன் கூற்றின் வழி உணரலாம். இந்நிலையில், தமிழ்க்கல்வியைக் கட்டாயமாக்க அரசியலார் முயலாத நிலையினைக் கண்டிக்கிறார்.

**சுமைசுமையாய் அரசியல் சீர்**
**சுமந்தவர்கள் இதுவரைக்கும்**
**சொன்ன துண்டா**
**தமிழ்க் கல்வி தமிழ்நாட்டில்**
**காட்டயம் என்பதொரு**
**சட்டம் செய்ய! (தமிழியக்கம்)**

பாரதிதாசன் அன்று கேட்டதற்கு எதிர்நிலையாக இன்று ஆங்கில வழிக்கல்விக்கு அரசும் நீதிமன்றமும் வாசல் திறந்துவிட்டுள்ளன. தமிழ் ஆர்வலர்களின் குரலும் போராட்டமும் சட்டத்தினாலேயே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது போன்ற தோற்றம் உருவாகிவிட்டது. அரசு, நீதிமன்றங்கள் ஆங்கிலவழிக் கல்வியை ஆதரிப்பதற்கும், ஆங்கிலக் கல்வியைப் பலரும் விரும்புவதற்கும் சொல்லப்படும் காரணம் வேறு மாநிலங்களுக்கு அல்லது வேறு நாட்டுக்குச் சென்றால் தமிழை மட்டும் தெரிந்து வைத்திருந்து என்ன செய்வது? என்பதுதான். அதற்கு விடையாக, "நாம் முழுச்சுதந்திரம் பெற்ற நிலையில் நம் குழந்தைகள் யாவரும் நம்மொழியையும், நம் மொழி இலக்கியங்களையும் படித்தாலே போதுமானது. வேறு இரு மொழிகளை நம் குழந்தைகள் யாவர்

மீதும் திணிக்க வேண்டியதில்லை. மற்ற மாநிலங்களுக்கோ மற்ற நாடுகளுக்கோ போகவேண்டியுள்ளதோ அவர்கள் மட்டும் தேவையான மொழியைத் தேவையானபோது கற்றுக் கொள்ளலாம். நம் மொழியை நேராக கற்றிருப்பதால் அடுத்த மொழியை எளிதாகக் கற்கமுடியும். ஆகவே எப்போது தேவையோ அப்போது கற்றுக்கொள்ளலாம். இத்தகைய மொழிக்கொள்கையே நம் மக்கள் யாவரும் கல்விகற்கவும் நம்நாட்டு முன்னேற்றத்திற்கும் தேவை."[7] என்று கல்வியாளர் ச.முத்துக்குமரன் எடுத்துரைக்கிறார். இதனைத்தான் பாரதிதாசன் அன்றே,

**தமிழுயர்ந்தால் தமிழ்நாடு**
**தானுயரும் அறிவுயரும்**
**அறமும் ஓங்கும் (தமிழியக்கம்)**
**இமயமலை போலுயர்ந்த**
**ஒருநாடும் தன்மொழியில்**
**தாழ்ந்தால் வீழும் (தமிழியக்கம்)**

என்று பாடினார். முன்னேற்றம் கண்ட பல நாடுகளில் பயணம் மேற்கொண்டும் பணியாற்றியும் அனுபவம் பெற்ற கல்வியாளரான க.ப.அறவாணன், "பக்கத்தில் உள்ள சிங்கப்பூர் தொடங்கி ஜப்பான், பிரான்சு, ஜெர்மனி முதலாய ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஆஸ்திரேலிய நாடுகள் அனைத்திலும் கல்விமுறை இமயத்தின் எவரெஸ்டாக உயர்ந்து இருந்தது. கிட்டத்தட்ட அனைத்து வளர்ந்த நாடுகளிலும் கல்வி மொழி தாய்மொழியாகவே இருக்கின்றது. ஜப்பானில் ஜப்பானியம், பிரான்சில் பிரஞ்சு, ஜெர்மனியில் ஜெர்மன் என்று எல்லா நாடுகளிலும் மழலைப் பள்ளி முதல் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் படிப்பு வரை தாய் மொழியிழிலேயே கற்பிக்கப்படுகின்றன. வளர்ந்த நாடுகள் மட்டுமல்ல, வளர்ந்து வரும் வியட்நாம், கொரியா, சீனம் முதலான நாடுகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல."[8] என்கிறார். இதனைத்தான் தமிழியக்கத்தில் பாரதிதாசன் முறையாக எடுத்துரைக்கிறார்.

வடமொழியும், இந்தியும் இங்கு நுழைவதற்குக் கடவுள் வழிபாட்டு நெறிகளும் காரணமாகின்றன. இன்றைக்கு ஆயிரக்கணக்கான பெயர்களில் கடவுள்களும் தெய்வங்களும் அவற்றிற்கு இலட்சக்கணக்கில் ஆலயங்களும், வழிபாட்டுமன்றங்களும் இருக்கிற நிலையில் புதிதாக வந்து முளைத்துள்ள சாய்பாபா கோயில்களால் இந்தியும் எளிதாக உள்வருவதைக் கண்ணுற்றால்,

**கடவுள்வெறி சமயவெறி**
**கன்னல் நிகர் தமிழுக்கு**
**நோய்நோய் நோயே (தமிழியக்கம்)**
**இந்தும தம்என்ற பேச்சையே – சொல்லி**
**இன்பத் தமிழன்னை மூச்சையே**
**கொந்திடப் பார்த்தனர் பன்முறை – இந்திக்**
**கொம்பூதி வந்தனர் இம்முறை.". (இந்தி எதிர்ப்புப் பாட்டு- பார்க்கட்டும்)**

என்று பாரதிதாசன் பாடுவதன் பொருண்மை விளங்கும்.

பாரதிதாசன் கவிதைகளை ஆய்வு செய்யும் தா.வே.வீராசாமி, "பாரதிதாசன் இதுவரையில் தமிழைப்பற்றி இதுபோன்று எவரும் பாடியதில்லை என்று கூறும்வண்ணம் பாடினார்." என்கிறார். (டாக்டர் தா.வே.வீராசாமி,பட்டறையிலே பாரதிதாசன்,ப.29) நுண்மைமையாக ஆய்வு செய்தால் எதிர்காலத்தில் இதுபோல் தமிழ் பற்றி எவரும் பாடமுடியுமா என்னும் வகையில் பாரதிதாசனின் மொழிச்சிந்தனைகள் விளங்குகின்றன.

**அவர் மட்டும் தமிழகத்தில் பிறக்கா விட்டால்**
**அமுதமென தமிழுணர்ச்சி அற்றி ருப்போம்.**

**(பொன்னடியான் கவிதைகள், முதற்தொகுதி ப.226.)**

என்னும் பொன்னடியான் கூற்றும் மிகையன்று. தமிழின் இனிமையைப் பேசும்போதும், ஆதிக்க மொழிகளை எதிர்க்கும்போதும் வெற்று வாழ்க! ஒழிக! முழக்கமிடாது, உரிய விளக்கங்களோடும் சான்றுகளோடும் தம் கருத்தை வலியுறுத்தும் போக்கினை பாரதிதாசனிடம் காணமுடிகிறது. எனினும், அழுத்தமான உணர்வு வெளிப்பாடும் இயல்பாக அமைகிறது. தமிழை அழியாமல் காப்பதென்பது

 ISSN: 2454-3993

தமிழ்ப் பற்றாளர்கள் சிலர் அல்லது பலர் சேர்ந்து செய்யக்கூடிய காரியமன்று அது ஓர் இயக்கமாகச் சமுதாயத்தின் அனைவரும் இணைந்து முன்னெடுக்கவேண்டியதாகும் என்பதைத் தமிழியக்கத்தின்வழி உணர்த்தியுள்ள பாரதிதாசனின் மொழிச்சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டு செயல்படவேண்டிய காலம் இது என்பதைத் தமிழ்த்துறையினர் உணர்தல் வேண்டும். அரசு நிறுவனங்களின் நிதி உதவியாலும், தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவின் சான்றுபெறவும், தன்மதிப்பீட்டு அறிக்கையின் புள்ளிகள் உயரவும், சில நேரங்களில் வணிக நோக்கிலும் இவை யாவற்றிலுமிருந்து வேறுபட்டு மெய்ம்மையான தமிழ்ப்பற்றாலும் ஆய்வு நோக்கத்தாலும் இன்றைக்குத் தமிழியலில் ஆய்வு செய்வோர் எண்ணிக்கையும் கருத்தரங்கம் நிகழ்த்துவோர் எண்ணிக்கையும் பல்கிப் பெருகியுள்ளன. இத்தகைய ஆய்வுகளால், புதிய புதிய நூலாக்கங்களால் தமிழ் வளமான சாலையில் பயணிப்பதைக் காணமுடிகிறது. அதே நேரத்தில் கண்காணாத தூரத்திலல்ல, கண்ணுக்கு எட்டிய தூரத்திலேயே "யுனெஸ்கோ" எச்சரிக்கை பலகையின் அச்சுறுத்தலோடு படுபாதாளத் தடைகளும் தெரிகின்றனவே. இவை குறித்தும் ஆய்வு செய்யவேண்டியது கட்டாயமாகும். "இந்திமொழி வேகமாகப் பரப்பப்பட்டு வருகிறது. தமிழ் மொழியைக் காக்கக் கடமைப்பட்டவர்கள் பிணக்கிலும் பூசலிலும் காலம் கழித்து வருகின்றனர். செல்வாக்குத் தளர்ந்துவரும் ஆங்கிலத்தை மட்டும் இழுத்துப் பிடித்துவைக்க முயல்கிறார்கள். இவற்றிற்கிடையே செயற்கைக் கற்பனை மொழியான வடமொழிக்கு ஆட்சித்தலைமை பெற்றுத்தர வாய்ப்புக் கிடைக்குமா என்று சிலர் ஏங்கி நிற்கின்றனர்." (மு.வரதராசனார், தமிழ்ப்பற்று,ப.18) சற்றேறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு மு.வ.சொன்னது இன்று சொல்வதுபோல் இருக்கிறது. எனவே, இன்றைய அரசியல், சமுதாயச் சூழலில் தமிழ்க் கவிஞர்களின், கல்வியாளர்களின் மொழிச்சிந்தனைகளை ஆய்வு செய்து அதன் வழி பணியாற்ற வேண்டிய உடனடித் தேவையைத் தமிழ் ஆய்வாளர்களுக்கு உணர்த்துவதும் இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

1. தமிழேந்தி, தமிழேந்தி கவிதைகள், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி வெளியீடு, ப..57. சென்னை, சனவரி:2013,
2. டாக்டர் தா.வே.வீராசாமி,பட்டறையிலே பாரதிதாசன், ப.29. மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, முதற்பதிப்பு 1971,
3. வே.ஆனைமுத்து(ப.ஆ.),பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள், ப.2813. பெரியார் ஈ.வெ.ரா.நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை வெளியீடு, திசம்பர்:2009, முதல் வரிசை,
4. அ.அறிவொளி, பாரதிதாசனில் புதியபார்வை, பக்..54,55. அன்பரசி வெளியீட்டகம், சிக்கல். செப்டம்பர்:1975,
5. மு.வரதராசனார், தமிழ்ப்பற்று, ப.20. பாரிநிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு : 1985,
6. தணிகைச்செல்வன், தலித்தியம் தமிழியம் இந்தியம், ப.70. பல்கலைப் பதிப்பகம், சென்னை24, முதற்பதிப்பு:1998,
7. தமிழ்மொழிக் கொள்கை ஆவணம், ப.22. தலைநகர்த் தமிழ்ச்சங்கம், சென்னை-114, முதற்பதிப்பு:2005,
8. க.ப.அறவாணன், தமிழர்: வருந்தவும் திருந்தவும், அயல்நாட்டுப் பயண அனுபவங்கள், ப.84. தமிழ்க் கோட்டம், பாண்டிச்சேரி-5, முதற்பதிப்பு:2003,